# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

Under Section 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8167289

1. District மாவட்டம்: Thiruvallur  PS காவல்நிலையம்: V&AC, Thiruvallur  Year ஆண்டு: 2024  FIR No. மு.த.அ. எண்: 10/AC/2024/TVL  Date நாள்: 11.07.2024 16.30 hrs

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 (as amended in 2018)  Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்:

3. (a) Occurrence of Offence Day: குற்ற நிகழ்வு நாள்  Date from நாள் முதல்: 11.07.2024 at 11.00 hrs.  நாள் வரை
Time Period: நேர அளவு  Time from: நேரம் முதல்  Time to: நேரம் வரை
(b) Information Received at PS. Date: காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 11.07.2024  Time நேரம்: 15.30 hrs
(c) General Diary Reference: Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: 11.07.2024  Time நேரம்: 15.30 hrs & 16.30 hrs

Seen
1. [illegible] 12/7/24
2. [illegible] 12/7/24

4. Type of Information: Written/ Oral: தகவலின் வகை: எழுத்து மூலம் / வாய் மொழியாக: Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: East 35 kms.
Beat Number: முறைக் காவல் எண்
(b) Address: முகவரி: Ambattur Venkatapuram Co-operative Building Society Ltd., Ambattur, Thiruvallur District.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S.: District:
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name: குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: Tr. G. Krishnamoorthy  (b) Father's/ Husband's Name: தந்தை / கணவர் பெயர்: Govindhan @ Govindhasamy
(c) Date / Year of Birth: நாள் / பிறந்த ஆண்டு: Age 33  (d) Nationality: நாட்டினம்  (e) Passport No.: வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue: வழங்கப்பட்ட நாள்  Place of Issue: வழங்கப்பட்ட இடம்
(f) Occupation: தொழில்: Private Company  (g) Address: முகவரி: No. 29/15, Aathukkal Street, Thirumazhisai, Thiruvallur District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Arumugam, Secretary, Ambattur Venkatapuram, Co-operative Building Society Ltd., Ambattur, Thiruvallur District

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

NiL.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு Demanded Rs. 40000/- as bribe

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted:-

While, I (S. Mala, Inspector of police) present at Thiruvallur, Vigilance and Anti corruption office, on 11.07.2024 at 15.30 hrs, one complainant Tr. G. Krishnamoorthy age 33 S/o Govindhan @ Govindasamy, No: 29/15 Aathukkal Street, Thirumazhisai, Thiruvallur District appeared before me and gave his written complaint against one Tr Arumugam, Secretary, Ambattur Venkatapuram co-operative Building Society Ltd, Ambattur, Thiruvallur Dt. The contents of the complaint is followed in the separate sheets.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

G. K[signature] 11-7-2024 | S. Mala [signature] 11/07/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

12.07.2024.
at 10.00hrs

Name: பெயர் S. Mala.
Rank: நிலை Inspector of police No. எண் ..........
VAC, Thiruvallur.

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.10/AC/2024/TVL, U/s. 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)**

பணிந்து அனுப்பப்படுகிறது

அனுப்புநர் G.கிருஷ்ணமூர்த்தி, வயது 33 த/பெ கோவிந்தன் (எ) கோவிந்தசாமி எண் 29/15, ஆத்துக்கால் தெரு, திருமழிசை பேரூராட்சி பூந்தமல்லி வட்டம், திருவள்ளூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், விஜிலன்ஸ் அலுவலகம், திருவள்ளூர். அம்மா, நான் மேற்படி முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். என் உடன் பிறந்தவர்கள் இரண்டு அண்ணன்கள் மற்றும் ஒரு தம்பி உள்ளனர். என்னுடைய அப்பா கோவிந்தசாமி பெயரில் திருமழிசை கிராமத்தில் சர்வே எண் 215/15-ல் 960 சதுரடி காலிமனை உள்ளது. அந்த இடத்தினை என்னுடைய அப்பா பூந்தமல்லி வட்ட கூட்டுறவு கட்டிட சங்கத்தில், பூந்தமல்லி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 1647/1999 நாள் 23.12.1999-ன் படி அடமானம் வைத்து, சொத்திற்கான அசல் ஆவணத்தை கொடுத்தும் ரூ.80,000/- கடன் பெற்றுள்ளார். கடன் தொகையை வட்டியுடன் சேர்த்து என்னுடைய அப்பா திருப்பி செலுத்திவிட்டு சொத்துக்கான அசல் ஆவணத்தை பெற்றுக்கொண்டுள்ளார். ஆனால் அடமானம் செய்து கொடுத்த ஆவணமானது ரத்து செய்யப்படாமல் இருந்தது. என்னுடைய அப்பா கடந்த 03.01.2023 ஆம் தேதியன்று இறந்துவிட்டார். தற்போது பூந்தமல்லி வட்ட கூட்டுறவு கட்டிட சங்கம் அம்பத்தூர் கூட்டுறவு சொசைட்டியுடன் இணைக்கப்பட்டுவிட்டது. எனவே என்னுடைய அம்மா எல்லம்மாள், நான் மற்றும் எனது சகோதரர்கள் அனைவரும், எனது அப்பா செய்து கொடுத்த அடமான பத்திரத்தினை ரத்து செய்து தருமாறு, அம்பத்தூரில் உள்ள அம்பத்தூர் வெங்கடாபுரம் கூட்டுறவு கட்டிட சங்கத்தில் 09.07.2024 ஆம் தேதியன்று, செயலாளர் ஆறுமுகம் அவர்களை சந்தித்து மனு கொடுத்தோம். அதனை தொடர்ந்து இன்று 11.07.2024 ஆம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் நான் அம்பத்தூர் வெங்கடாபுரம் கூட்டுறவு கட்டிட சங்க அலுவலகத்திற்கு சென்று செயலாளர் ஆறுமுகம் அவர்களை சந்தித்து நாங்கள் கொடுத்த மனு தொடர்பாக நடவடிக்கை எடுத்து எனது அப்பா செய்து கொடுத்த அடமானபத்திரத்தை ரத்து செய்து

தருமாறு கேட்டேன். அதற்கு செயலாளர் ஆறுமுகம் அவர்கள், ரூ.40,000/- அவருக்கு தனியாக கொடுத்தால் உடனே பத்திரத்தை ரத்து செய்வதற்கான கடிதத்தை தயார் செய்து, வேலையை முடித்து கொடுப்பதாக சொன்னார், அக்கனம் அவர் லஞ்சமாகத்தான் கேட்கிறார் என்று தெரிந்து கொண்டேன். மேலும் அவர் கேட்டபணம் ரூ.40000/-மும், பத்திரம் ரத்து செய்வதற்கு அரசுக்கு கட்டவேண்டிய தொகையாக ரூ.5000/- எடுத்துக்கொண்டு நாளை 12.07.2024 அவருடைய அலுவலகம் வந்து பணத்தை கொடுக்குமாறும் அடுத்த வாரம் திங்கள் அல்லது செவ்வாய்கிழமை பத்திரத்தை ரத்து செய்து கொடுத்துவிடுவதாகவும் கூறினார். நான் எனது அம்மா மற்றும் சகோதரர்களிடம், அடமான பத்திரத்தை ரத்து செய்து கொடுப்பதற்காக கூட்டுறவு சொசைட்டியின் செயலாளர் ரூ.40000/-மும், பத்திரம் ரத்து செய்வதற்கு கட்டவேண்டிய தொகையாக ரூ.5000/- மும் கேட்பதாக சொன்னேன். எனக்கும், எனது அம்மா மற்றும் எனது சகோதர்களுக்கும், கூட்டுறவு சொசைட்டியின் செயலாளர் லஞ்சமாக கேட்ட பணத்தை கொடுத்து அடமான பத்திரத்தை ரத்து செய்து பெறுவதற்கு விருப்பம் இல்லை. எனவே சொசைட்டியின் செயலாளர் லஞ்சமாக பணம் கேட்பது தொடர்பாக விஜிலன்ஸில் புகார் கொடுக்கலாம் என முடிவு செய்தோம். எனவே நான் சொசைட்டியின் செயலாளர் ஆறுமுகம் லஞ்சமாக கேட்ட பணம் ரூபாய். 40,000/-மும், பத்திரம் ரத்து செய்வதற்கு கட்டவேண்டிய தொகையாக கேட்ட ரூ.5000/- மும் கொண்டு வந்துள்ளேன். எங்களுடைய அடமானபத்திரத்தை ரத்து செய்து கொடுப்பதற்காக லஞ்சமாக பணம் கேட்ட அம்பத்தூர் வெங்கடாபுரம் கூட்டுறவு கட்டிட சங்கத்தில் செயலாளராக பணிபுரியும் ஆறுமுகம் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தாங்கள் எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு கொடுப்பேன் என தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிக்கு, SdXXX G.Krishnamoorthy, 11.07.2024.

The original complaint and FIR are sent to the court of Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Thiruvallur and the other copies to the concern officers of DVAC.

**Honoured Sir,**

Received the above complaint on 11.07.2024 at 15.30 hrs and after getting proper permission from DVAC on this complaint, a enquiry is conducted in a discreet manner. Based on the outcome of the enquiry, the antecedents of the accused, the reputation of the accused and genuineness of the complainant are verified. Since, there is prima-facie made out to register a FIR on said complaint. Hence, I registered a case in Thiruvallur V&AC, Cr.No.10/AC/2024/TVL u/s. 7 of The Prevention of Corruption Act-1988 (as amended in 2018) on 11.07.2024 at about 16.30 hrs.

S. Mala 11/07/2024
**(S.MALA),**
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Thiruvallur.